**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண். 711/2023</u>**

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 20–ம் நாள் வியாழக்கிழமை **வா.சா.2**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குப்புசாமி | தொழில் | விவசாயம் |
| த/பெ | கருப்புசாமி | கிராமம் | நஞ்சியம்பாளையம் |
| வயது | 61 | தாலுகா | தாராபுரம் |
| | | மாவட்டம் | திருப்பூர் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. என்னை சாட்சி கையெழுத்து செய்வதற்கு நேரில் வந்து அழைத்தார்கள். 22.04.2021–ம் தேதி 11 மணிக்கு அவ்வாறு அழைத்தார்கள். நான் கையெழுத்து செய்திருந்த கடனுறுதி சீட்டு தொடர்பான தாராபுரம் சார்பு நீதிமன்றத்தில் சாட்சியமளித்தேனா என்றால் சரியாக நினைவில்லை. என்னிடம் காட்டப்படும் கடனுறுதி சீட்டின் சான்றிட்ட நகலின் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி கடனுறுதிசீட்டின் சான்றிட்ட நகலில் உள்ள சாட்சி கையெழுத்து பி.வா.சா.ஆ.1. மேற்படி ஆவணம் தயார் செய்யப்பட்ட தேதியில் பிரதிவாதியின் ஆதார் அட்டையின் புகைப்பட நகல் வாதிக்கு கிடைக்கப்பெறவில்லை. வாதி மற்றும் பிரதிவாதி விலை பேசிக்கொண்டு விபரம் எனக்கு நேரடியாக தெரியும். 22/4/2021–ம் தேதி காலை சுமார் 8 அல்லது 9 மணிக்கு அவ்வாறு பேசினார்கள். தாவா சொத்து விவரம் நான்கு மால் விவரங்கள், விஸ்தீரணம் ஆகியவை எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்தின் அளவு 72 ¾ க்கு 40 ஆகும். அதன் விஸ்தீரணம் 6.67 சென்ட் ஆகும்.

2. பிரதிவாதி, வாதிக்கு எந்தவிதமான நிறைய ஒப்பந்தமும் எழுதிக் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்தம்

மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்தில் பிரதிவாதி கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சட்டவிரோதமாக தாவா சொத்தை அடைய வேண்டும் என்று நோக்கத்தில் வாதி தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு அவருக்கு ஆதரவாக நான் தவறான சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னை சாட்சி கையெழுத்து செய்வதற்கு அழைத்த போது நான் பதிவு அலுவலகத்தில் இருந்தேன்.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.20 20:04:42 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.